## அமிர்தா பல்கலைக்கழகத்தின் சார்பாக

# இந்திய கிராமங்களை மேம்படுத்தும் பட்டறை நிகழ்ச்சி



இந்திய கிராமங்களில் உள்ள அடிப்படை பிரச்சினைகளை அறிந்து அவற்றை சரி செய்வதற்காகவும், அக்கிராமங்களை மேம்படுத்துவதற்காகவும் அனைத்து பல்கலைக் கழகங்களுக்கும் முன்மாதிரியாக திகழும் கோவை அமிர்தா பல்கலைக்கழகம் தேசிய அளவிலான பட்டறை நிகழ்ச்சி நடைபெற்றது.

இதன் முதல் பகுதியாக 150 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தின் அருகில் நடைபெற்றது. இதில் அமிர்தா பல்கலையின் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் மின் மற்றும் கணினி பொறியியல் இணை பேராசிரியர் டாக்டர் பிரகலாத் துவங்கி வைத்து தலைமையுரையாற்றினார். அவர் பேசுகையில், அடிமட்டத்தில் உள்ள சாதாரண மனிதன் மற்றும் மக்களை கவனிக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு உள்ளது. 90 சதவீத கல்வியறிவு பயன்படுத்தப்படாமல் வீணாக செலவு செய்யப்படுகிறது. ஆனால் அமிர்தா பல்கலைக் கழகம் அப்படி இல்லாமல் இந்த மாதிரியான நிகழ்ச்சிகளை நடத்தி சமுதாய மற்றும் மனிதாபிமான சேவைகளை வழங்கி அப்படிப்பட்ட எண்ணங்களை உடைத்துள்ளது என்றார்.

அமிர்தா பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் வெங்கட் ரங்கன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில், அமிர்தா பல்கலையின் மாணவர்கள், ஆசிரியர்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இந்திய கிராமங்களில் இருந்து அங்குள்ள மக்களின் அடிப்படை தேவைகள் மற்றும் அவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அதற்கு தேவையான தீர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனை அமிர்தா லைவ் இன் லாப்ஸ் என்று அழைக்கின்றனர். இந்த அனுபவத்தின் மூலமாக மாணவர்கள் அவர்களுடைய ஆராய்ச்சிக்கு தேவையான தகவல்களை மக்களிடம் நேரடியாக கேட்டு அறிந்து கொள்கின்றனர் என்றார்.

நிகழ்ச்சியில் cdac இணை இயக்குனர் விகே பரதன், டிசின்ஸ் இன்னொவேசன் தலைவர் டாக்டர் பி.பாலமுரளீதர், கேரளா வேளாண் பல்கலைக்கழக இயக்குனர் டாக்டர் எ.கே. செரிப் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினர்.

இந்த நிகழ்ச்சியானது அமிர்தா பல்கலையின் எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் துறையால் நடத்தப்பட்டு வருகிறது.